# 35

# ஐயாயிரம் பேர்களை போஷித்தல்

## (14:13-21)

*திரளான ஜனங்களை போஷித்த நிகழ்ச்சி இயேசுவுக்குக் கூடாத காரியம் எதுவுமில்லை என்பதைக் காட்டுகிறது. அவருடைய சீஷர்கள் இந்த உண்மைக்கு நிரூபணமாக ஏராளமான கிரியைகளை ஏற்கனவே பார்த்துள்ளனர், இருந்தாலும் சிலவேளைகளில் அவர்கள் சந்தேகப்பட்டனர். மேற்கொள்ள இயலாத தடை என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கையில் தேவனுடைய வல்லமையை விளங்கப்பண்ணவும் ஜனங்களிடத்தில் தமது சுய அன்பைக் காட்டும்படியாகவும் இயேசு அவைகளை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தினார்.*

## இயேசு அவ்விடம் விட்டுப்போனார் (14:13, 14)

**[13]இயேசு அதைக் கேட்டு, அவ்விடம் விட்டு, படவில் ஏறி, வனாந்தரமான ஒரு இடத்துக்குத்தனியே போனார். ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு, பட்டணங்களிலிருந்து கால் நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள்.**
**[14]இயேசு வந்து, திரளான ஜனங்களைத் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தராய் இருந்தவர்களை சொஸ்தமாக்கினார்.**

***வசனம் 13.*** *இந்த நேரத்தில் யோவானின் மரணத்தைக் குறித்த சம்பவக் காட்சியிலிருந்து (14:3-12), இயேசுவின் ஊழியத்துக்கு காட்சி மாறுகிறது. இந்த வசனங்களில் தொடர்புகள் தொடர்ந்து தெளிவற்ற நிலையிலேயே இருக்கிறது.* NASB *மொழிபெயர்ப்பில் 13 வது வசனம் இப்படியாகத் தொடங்குகிறது,* **இயேசு யோவானைக் குறித்து கேட்டபோது.** *யோவானைக் குறித்து என்ற இரண்டு வார்த்தைகள் கிரேக்க வசனப்பகுதி யில் இல்லை, மொழிபெயர்ப்பாளர்கள் இதைச் சேர்த்துள்ளனர். இந்த சேர்க்கை சரியாக இருக்குமானால், பிறகு மீதியுள்ள அனைத்தும் இந்த அதி காரத்தில் யோவானுடைய முன் நடந்த காட்சிகளையே கொண்டுள்ளது. இயேசுவைக்குறித்து ஏரோது மதிப்பிடுவதற்கு முன்பாகவே யோவானின் சிரச்சேதம் நடந்திருக்க வேண்டும் (14:1, 2). இயேசு இப்போது ஓய்வு எடுக்கும்படி சென்ற காரியம் தான் ஈவு இரக்கமற்ற முறையில் ஏற்பட்ட யோவானின் மரணத்துக்கு அவருடைய நேரடி கிரியைப் போல காட்சி தருகிறது.*

யோவான்தான் உயிர்த்தெழுந்து வந்திருக்கிற இயேசு என்று ஏரோது நம்பிக் கொண்டிருந்ததையொட்டி யோவானைக் குறித்து இயேசு கேட்டபோது என்ற வார்த்தையை மத்தேயு குறிப்பிட்டிருக்கலாம் *(14:1, 2)*. இந்த வசனபகுதியை புரிந்து கொள்வது முன் நடந்த காட்சிகளை *14:3-12* அளவிட்ட ரீதியில் அடைப்புக்குறிக்குள் கொண்டுவரலாம். ஏரோது தம்மைப்பற்றி சொன்ன வாக்கியத்தின் நிமித்தம் ஒருவேளை தமது ஓய்வினால் இயேசு தம்மை பிரதிபலிப்பதாக இருக்கலாம். மாற்கு *6* மற்றும் லூக்கா *9* ஐ ஒப்பிட்டு ஆராய்வோமானால் இந்த வரலாற்று விளக்கம் சரியானதாகும். கூடுதலாக, மாற்கும் லூக்காவும் இயேசுவின் பின்வாங்குதலுக்கு மற்றொரு உண்மையையும் அளித்திருக்கிறார்கள்: அளவிடப்பட்ட கட்டளையில் பன்னிருவரும் அனுப்பப்பட்டுத் திரும்பி வந்ததால் அவர்களுக்கும் ஓய்வு தேவைப்பட்டது (மாற்கு *6:30, 31*; லூக்கா *9:10*).

இதற்கு முந்தைய அதிகாரத்தில், இயேசு தமது சொந்த ஊராகிய நாசரேத்தில் ஊழியம் செய்தார் *(13:54-58)*. பிறகு கலிலேயா கடல் கரைக்கு தமது ஊழியத்தினிமித்தம் திரும்பிச் செல்கிறார். ஏரோது தம்மைக்குறித்து சொன்ன வார்த்தையை கேட்ட பொழுது **வனாந்தரமான ஒரு இடத்துக்குத் தனியே போனார்.** இங்கு "தனியே போனார்" என்று குறிப்பிடப்படுவது அவர்களுடைய சீஷர்கள் அவரோடு கூட இருப்பதை தவிர்த்து பேசுவது அல்ல (மாற்கு *6:31, 32*; லூக்கா *9:10*). "வனாந்தரமான ஒரு இடம்" என்பது கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட (*erēmon topon*) ஒரு சொற்றொடர். இயேசு ஜனநடமாட்டம் இல்லாத ஒரு இடத்துக்குப் போனார், ஆனால் அது "வனாந்தரமல்ல," அது புல் நிறைந்த பகுதியாகக் குறிப்பிடப்படுகிறது *(14:19*; மாற்கு *6:39)*.

லூக்கா எழுதியிருக்கிறபடி, இயேசுவும் சீஷர்களும் பெத்சாயிதாவைச் சேர்ந்த பட்டணத்துக்குப் போனார்கள் (லூக்கா *9:10*). எப்படியிருப்பினும் போஜனத்தைக் கொடுத்த அற்புதத்துக்குப் *பிறகு* இயேசு தமது சீஷர்களை பெத்சாயிதாவுக்கு எதிரே தமக்கு முன்னே போயிருக்கும்படி இயேசு சொன்னார் (மாற்கு *6:45*). ஒருவேளை இயேசுவின் நாட்களில், ஒன்றுக்கு மேற்பட்ட பட்டணம் "மீன் பிடி இல்லம்" அல்லது "மீனவர் இல்லம்" என்று அழைக்கப்பட்டது. லூக்காவில் குறிப்பிடப்படுகிற பெத்சாயிதா ஏரிக்கு அருகில் வடக்கிழக்குப் பகுதியில் இருந்து மாற்குவில் குறிப்பிடும் பெத்சாயிதா வட மேற்கு பகுதியில் கப்பர்நகூமின் அருகில் இருந்திருக்க வேண்டும் (யோவான் *6:17*). ஜோசிபஸ் பெத்சாயிதாவை (Julias) வடக்குக் கடற்கரையில் இருந்ததாக அடையாளம் காட்டினார், அது யோர்தான் நதி கடலுக்குள் நுழைகின்ற இடத்திற்கு கிழக்கே இருந்தது.[1]

இந்த பெத்சாயிதா காற்பங்கு தேசாதிபதியான பிலிப்புவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது, அத்துடன் ஏரோதுவிடமிருந்து சுதந்திரம் பெற்றதாக இருந்திருக்க வேண்டும்.[2] இயேசு வேண்டுமென்றே ஆபத்திலிருந்து தனிமையில் விலகிப்போனார், ஆகிலும் ஏதோ பயத்தினால் அவர் அப்படிச் செய்யவில்லை. இந்த அதிகாரத்தின் முடிவில் அவர் கலிலேயாவிலுள்ள கெனெசரேத்துக்குப் போனார் *(14:34)*, அது ஏரோதுவின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இயேசு தமது ஊழியத்தில் எல்லாவற்றையும் ஏற்றவேளையில் நிறை வேறப்பண்ணவேண்டும் என்பதை அறிந்து, தமது ஊழியத்தைக் குறித்து

*மிகவும் எச்சரிக்கையாக இருந்தார். இன்னொரு சமயம், பரிசேயர்கள் இயேசு ஏரோதுவினால் கொல்லப்படுவார் என்று தெரிவித்திருந்தனர் (லூக்கா 13:31). அவர் ராஜாவுக்கு செய்தி அனுப்பி, போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள், என்று சொல்லி, "நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்" என்றார் (லூக்கா 13:32). இது அவருக்கு வரவிருந்த மரணத்தைக் குறித்த ஒரு தெளிவான தீர்க்கதரிசனம், அது எருசலேமில் நிறைவேறும் (லூக்கா 13:33).*

*இயேசு படவில் ஏறி கலிலேயாக் கடலை கடந்து போகிறார் என்று தெரிந்த போது,* ***ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு பட்டணங்களிலிருந்து கால் நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள்.*** *அவர்கள் வடக்கு கடற்கரையோரமாய் நடந்து போனார்கள். "அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால்" அவருக்குப் பின் சென்றார்கள் (யோவான் 6:2). இந்த ஜனங்கள் இயேசுவினிடம் வருவதற்கு இருந்த எந்த தடையையும் மேற்கொள்ள விருப்பமாயிருந்தார்கள்.*

***வசனம் 14. படகு போய் கரை சேர்ந்தவுடனே,*** *இயேசு வந்து,* ***திரளான ஜனங்களைக்*** *கண்டார். அவர் அங்கு போய் சேருவதற்கு ஜனங்களில் கொஞ்சம் பேராகிலும் கால் நடையாய் அவ்வளவு தூரம் கடந்து போயிருந்தனர். கூட்டத்தைக் கண்டு இயேசு* ***மனதுருகினார்*** *(காண்க 9:36; 15:32; 20:34). "அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால்" அவர்களிடத்தில் போனார் (மாற்கு 6:34). அவருடைய இரக்கத்தின் விளைவால், அவர் அவர்களுடைய வியாதிகளையெல்லாம் சுகப்படுத்தினார்.*

## *திரளான ஜனங்களை இயேசு போஷித்தல் (14:15-21)*

***[15]சாயங்காலமானபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: இது வனாந்தரமான இடம், நேரமுமாயிற்று; ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்குப் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள்.***

***[16]இயேசு அவர்களை நோக்கி: அவர்கள் போக வேண்டுவதில்லை; நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள் என்றார்.***

***[17]அதற்கு அவர்கள் இங்கே ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமேயல் லாமல், வேறொன்றும் இல்லை என்றார்கள்.***

***[18]அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார்.***

***[19]அவர் ஜனங்களை புல்லின்மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களை பிட்டு சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள்.***

***[20]எல்லாரும் சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்.***

***[21]ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்.***

*நான்குசுவிசேஷப் புத்தகங்களிலும் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு போஜனம் கொடுத்ததை பதிவு செய்துள்ள ஒரே அற்புதம் இதுமட்டும்தான் (14:15-21; மாற்கு 6:35-44; லூக்கா 9:12-17; யோவான் 6:5-14). இதன் மூலம் இதன் முக்கியத்துவம் சுவிசேஷ எழுத்தாளர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. நான்காயிரம் புருஷர்களை போஷிக்கிற சம்பவம் மத்தேயு மாற்கு புத்தகங்களில் மட்டுமே குறிப்பிடப்படுகிறது (15:32-39; மாற்கு 8:1-9).*

*யூதர்களின் பாரம்பரியத்தின்படி மேசியாத்துவம் அற்புத அப்பத்தால் போஷிக்கப்படுவதாயிருக்கும் என்று எதிர்பார்த்தலும் ஒன்று,[3] அப்பங்களைப் பெருகப் பண்ணின காரியம் மூலம் மோசேயினால் முன்னு ரைக்கப்பட்ட தீர்க்கதரிசி தாமே என்று இயேசு விளங்கப்பண்ணினார் (உபாகமம் 18:15, 18; யோவான் 6:14). மோசேயின் நாட்களில், தேவன் தமது ஜனங்களை வனாந்திரத்தில் மன்னாவைக் கொண்டு போஷித்தார், அது வானத்திலிருந்து கொடுக்கப்பட்ட அப்பம் (யாத்திராகமம் 16:1-36).[4] இயேசு திரளான ஜனங்கள் புசிக்கத்தக்க அப்பங்களை மட்டும் கொடுக்கவில்லை, ஆனால் அவரே பரலோகத்திலிருந்து இறங்கி வந்த ஆவிக்குரிய அப்பம். இந்தக் கருத்து யோவான் சுவிசேஷத்தில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது (யோவான் 6:26-59).*

*அப்பமும் மீனும் ஆதிசபையின் கலை வேலைப் பாடுகளில் (சித்திர வேலைப்பாடு) அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கிறிஸ்தவர்கள் இயேசுவின் அற்புதங்களில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள், ஏனெனில் தேவன் தமது ஜனங்களை வனாந்தரத்தில் மன்னாவைக் கொண்டு போஷித்திருந்தார், மேலும் அவர்கள் கடைசி காலங்களில் மேசியாத்துவ விருந்திலே பங்கு பெறுவோமென எதிர்பார்த்திருந்தனர் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 2:17).[5]*

***வசனம் 15.*** *தாம் ஆரம்பத்தில் திட்டமிட்டபடி அவர் தமது சீஷர்களுடன் ஒய்வெடுக்காமல், இயேசு வியாதிப்பட்டவர்களுக்கு சுகத்தைக் கொடுக்கவும் கூட்டத்துக்குப் போதிக்கவும் தமது நாளை செலவிட்டார் (14:14; மாற்கு 6:34).* ***சாயந்தரம் ஆனபோது, சீஷர்கள்*** *அவர் ஜனங்களை அனுப்பிவிட வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் கூடியிருந்த* ***இடம்*** *ஒரு வெறிச்சோடிய வனாந்தரமான, அதாவது,* ***ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு இடம்*** *(காண்க 14:13 ன் விளக்கவுரை). மேலும், அது மாலை உணவை உண்ண வேண்டிய* ***நேரத்தைக்*** *கடந்திருந்தது. அந்தக்* ***கூட்ட ஜனங்கள்*** *கலைந்துபோய் வித்தி யாசப்பட்டக் கிராமங்களுக்குச் சென்று* ***தங்களுக்குத் தேவையான உணவை வாங்க வேண்டும்.*** *சீஷர்கள் ஜனங்கள் மீது காட்டிய பரிவு உண்மையானதே. ஜனங்கள் எந்த முன்கூட்டிதிட்டமும் செய்யாமல்தான் இயேசுவைப் பின்பற்றி வந்திருந்தார்கள், எனவே தங்களுக்கென அதிகமான உணவும் எதுவும் எடுத்து வரவில்லை. இந்த வேளையில் அவர்கள் பசியுடன் இருந்தார்கள். சீஷர்களும் கூட பசியாக இருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.*

***வசனம் 16. இயேசு அவர்களைப் பார்த்து: அவர்கள் போக வேண்டுவதில்லை; நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்,*** *என்று கூறினபோது சீஷர்கள் எப்படி அதிர்ந்திருப்பார்கள்! யோவான் எழுதின சுவிசேஷத்தின்படி, இயேசு பிலிப்புவிடத்தில், "இவர்கள் சாப்பிடத் தக்கதாக*

அப்பங்களை எங்கே கொள்ளலாம்?" என்று கேட்டார் (யோவான் 6:5). ஒரு விளக்கக் குறிப்பும் கூடவே கொடுக்கப்பட்டது: "தாம் செய்யப் போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக்கேட்டார்" (யோவான் 6:6). பிலிப்பு ஒருவேளை கூட்டத்தில் இருந்த ஜனங்களின் தொகையை தோரயமாகக் கணக்கிட்டு அவர்களெல்லாருக்கும் தேவையான அப்பங்களை வாங்க போதியளவு பணமில்லை என்று சொல்லியிருக்கலாம் (6:7). மாற்கு 6:37ன்படி, சீஷர்கள் இயேசுவிடம், "நாங்கள் போய், இருநூறு பணத்துக்கு அப்பங்களை வாங்கி இவர்களுக்குப் புசிக்கக் கொடுக்கக் கூடுமோ?" என்றார்கள். ஒரு பணம் என்பது ஒரு கூலிக்காரனின் அன்றாட சம்பளம் (20:2), இருநூறு பணம் என்பது ஒரு கூலிக்காரனின் வருமானத்தில் ஒரு வருடத்தின் மூன்றில் இரண்டு பங்கு வருமானமாகும்.

பிலிப்புவின் அக்கரை நியாயமானதும் அவனுடைய கவலை புரிந்து கொள்ளக் கூடியதுமே, ஆகிலும் இயேசுவில் கொண்டிருந்த விசுவாசக் குறைவு நியாயப்படுத்தமுடியாதது. இயேசுவினால் செய்யக் கூடாத காரியம் எதுவுமில்லை. அவருடைய சீஷர்கள் அசைக்க முடியாத ஆதாரத்துடன் இவைகள் நடப்பதை அறிந்திருந்தும், இன்னமும் சந்தேகப்பட்டார்கள். அவர்கள் பார்த்தவைகளெல்லாம் யாராலும் தடைசெய்யக் கூடாத அளவுக்கு உண்மையென கண்ட நேரத்தில், இயேசு அவைகளை தேவனுடைய வல்லமையை விளங்கப் பண்ணுகிறதும் தமது சொந்த அன்பை அவர்களுக்கு விளங்கப் பண்ணுகிறதுமான ஒரு சந்தர்ப்பமாக பார்த்தார்.

**வசனங்கள் 17, 18.** இயேசு அப்போஸ்தலர்களிடம், "உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு? போய்ப்பாருங்கள்" என்றார் (மாற்கு 6:38). **அவர்கள்** பார்த்து வந்து: **ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்** உண்டு என்றார்கள். இயேசு பதிலளித்து **அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்** என்றார். அப்பொழுது சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா "ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும்" வைத்துக் கொண்டிருந்த ஒரு பையனை அவரிடத்தில் கூட்டி வந்தான். ஆகிலும் சந்தேகப்படுவதில் பிலிப்புவுடன் சேர்ந்தவனாயிருந்து, "ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்" என்றான் (யோவான் 6:8, 9).

அப்பமும் மீன்களும் கலிலேயாவிருந்த ஏழைகளுக்கு அடிப்படை உணவாகும் (7:9, 10); இந்த போஜனப்பதார்த்தங்களை காலை உணவாகவும் கூட சாப்பிட்டார்கள் (யோவான் 21:9-13). இந்த விஷயத்தில் அப்பம் வார்க் கோதுமையால் செய்யப்பட்டிருந்தன (யோவான் 6:9). வார்க்கோதுமை மற்ற கோதுமைக்குமுன்பு இளவேனிற்காலத்தில் அறுவடை செய்யப்பட்டது (ரூத் 2:23). அது ஒரு மிருதுவற்ற தன்மையுள்ளதும் மற்ற கோதுமைகளைக் காட்டிலும் மலிவானதுமாக இருந்தது (வெளிப்படுத்தின விசேஷம் 6:6), ஆகையால் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்தவர்கள் மட்டுமே அதைப் புசிப்பார்கள். இந்த "அப்பங்கள்" வட்டமாகவும், சிறிதுமாய்க் காணப்பட்ட அப்பத் துண்டுகள். மீன்கள் கலிலேயாக் கடலில் பிடிக்கப்பட்ட சின்ன சின்ன மீன்களாக இருந்தவை. ஆகிலும் சுவிசேஷ சுருக்க சாரம்ஸத்தின்படி, "மீனுக்குப்" பயன்படுத்தப்படுகிற பொதுவான வார்த்தையையே (*ichthus*), பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் யோவான் மிகச்சிறிய வகையைக் குறிப்பிடும் பதத்தை *opsarion* பயன்படுத்துகிறார். மீன்கள் உப்பிட்டு

வழக்கமாக பாதுகாத்து வைக்கப்படும்.

இயேசு செய்த அற்புதங்களால் ஒரு பிரசித்தி பெற்ற விருப்ப உணவாகவோ, வசீகரிக்கிற பழங்களாகவோ, அல்லது பானமாகவோ மாறச் செய்யவில்லை. அவர் கொடுத்த உணவு தேவனுடைய அருட்கொடையின் பராமரிப்பு உணவின்றி தவிர்க்கிற மோசமான நிலையில் சூழ்நிலைத் தேவைகளை சந்திக்க வைக்கக் கூடியதாயிருந்தது (காண்க 6:25-34). நடந்த நிகழ்ச்சி, மேசியாவாகிய இயேசு, தம்மைப் பின்பற்றுவோருக்கு வனாந்திரத்தில் ஒரு உணவைக் கொடுத்து ஆதரிக்கிறார், என்பதை அறிவிக்கிறது.[6]

**வசனம் 19.** இயேசு **ஜனங்களை புல்லின்மேல் அமர்ந்து பந்தியிருக்கச் செய்தார்.** இப்படி ஒழுங்குபடுத்தும் பணி அவருடைய சீஷர்களால் நிறைவேற்றப் பட்டது (லூக்கா 9:14, 15). "பந்தியிருக்கச் செய்தார்" (*anaklinō*) என்பதை, இன்னும் நேரடிப் பதத்தில் "ஒய்வெடுத்த வண்ணம்" உண்ணும்படி அமருகிற விதம் எனலாம் (8:11). பச்சையான புல்லின் மேல் என்பது (மாற்கு 6:39), அது இளவேனிற்காலத் துவக்கம் என்பதை சுட்டிக் காட்டுகிறது. அது பஸ்கா பண்டிகை சமீபமாயிருக்கிறது என்பதற்கும் ஆதாரமாயிருக்கிறது (யோவான் 6:4). "ஜனங்கள் நூறு நூறு பேராகவும் ஐம்பதைம்பது பேராகவும், வரிசை வரிசையாய், உட்கார்ந்தார்கள்" (மாற்கு 6:40). மாற்கு புத்தகத்தில் "வரிசை வரிசையாக" என்று பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர், (*prasiai prasiai*), என்பது நேரடிப் பொருளில் "கூட்டங் கூட்டமாய்," நூறு பேர்களையும், ஐம்பது பேர்களையும் கொண்ட வரிசை முறையாக தோட்டத்து பிளாட்டுகளாகப் பிரிக்கப்பட்டாற்போல் புல்லிற்கு மேல் அமர வைக்கப்பட்டதாக ஆலோசனையாக கூறப்படுகிறது.

புல்லின் மேல் ஜனங்கள் அமர்ந்தபின்பு, இயேசு விருந்தளிப்பவராக அங்கே காணப்பட்டார். ஜனங்கள் எல்லாருடைய பார்வையிலும் அவர் **ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் தமது கையில் எடுத்துக் கொண்டார்.** பிறகு **வானத்தை அண்ணாந்து பார்த்து, உணவை ஆசீர்வதித்தார்.** வானத்தை அண்ணாந்து பார்ப்பது என்பது பொதுவாக யூதர்கள் ஜெபிக்கும் போது கொண்டிருக்கும் உடல்தோற்ற அமைவு (சங்கீதம் 121:1; 123:1, 2; 141:8; லூக்கா 18:13; யோவான் 11:41; 17:1). "அவர் உணவை ஆசீர்வதித்தார்" என்பது அந்த உணவுக்கு தேவனிடத்தில் நன்றி செலுத்தினார் (NIV) அதை வேறொரு பொருளாக மாற்றவில்லை; அதைப் பெருகப் பண்ணினார். பாரம்பரிய யூதர்கள் அப்பத்தை ஆசீர்வதிப்பது என்பது இதுதான். "தேவனாகிய கர்த்தாவே, சர்வலோக ராஜாவே, பூமியிலிருந்து அப்பத்தைக் கொடுக்கிற நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்."[7]

அப்பங்களை பிட்டு, மீன்களையும் பங்கிட்டார் (மாற்கு 6:41), சீஷர்களிடம் கொடுத்தார், சீஷர்கள் கூட்டத்தாருக்குக் கொடுத்தார்கள். நிகழ்ச்சி சுருக்கமாக கொடுக்கப்படுகிறது. அப்பங்களும் மீன்களும் பெருகப்பண்ணப்பட்ட சம்பவத்தை விளக்கப்படுத்த சில வார்த்தைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. William Hendriksen இதைக் குறிப்பிடுகையில், "அற்புதம் வெளிப்படுத்தப்பட்டது என்பதைக் காட்டிலும் அமல்படுத்தப்பட்டது என்பதே சரி என்றார்."[8]

மிகவும் வித்தியாசப்பட்ட வசனப்பகுதியில் குறிப்பிடப்பட்டாலும் ("எடுத்து," "ஆசீர்வதித்து," "பிட்டு," "கொடுத்தார்") அது கர்த்தருடைய

பந்தியை அமல்படுத்தின போது செய்யப்பட்டதாகக் கூறும் பதிவை ஒத்திருக்கிறது (26:26; மாற்கு 14:22; லூக்கா 22:19; 1 கொரிந்தியர் 11:23, 24). இயேசுவின் செயல் அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நாளும் யூத குடும்பத்து தகப்பனின் செயலை நினைவூட்டக் கூடியதாயிருந்தது. அவன் அப்பத்தை எடுத்து, வெகுமதியாய்க் கிடைத்த உணவுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தி, அப்பத்தைப் பிட்டு, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துண்டை பிட்டு புசிக்கக்கொடுப்பான்.[9]

**வசனம் 20. அவர்கள் எல்லாரும் புசித்து திருப்தியடைந்தார்கள்.** அவர்களுக்கு புசிக்க போதியளவு கொடுக்கப்பட்டதுமட்டுமல்ல, அவரவர்களுடைய தேவைக்கேற்ப வயிறை நிறைத்துக் கொள்ளும்படியும் கொடுக்கப்பட்டது. பழங்கால மத்தியதரைக்கடல் பகுதியில் ஒரு நல்ல விருந்தோம்பல் செய்பவர் வந்திருக்கும் விருந்தாளி போதியளவுக்கு புசிக்கத்தக்கதாக மட்டுமல்லாது மீதமாகவும் சாப்பாடு வைக்கப்பட ஏதுவாகவும் ஒழுங்கு செய்ய வேண்டுமென்பது அவர்களின் நம்பிக்கையாக இருந்தது.[10] யோவான் 6:12ல் தொடர்ந்து, "அவர்கள் திருப்தியடைந்த பின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: 'ஒன்றும் சேதமாய் போய்விடாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்து வையுங்கள்' " என்றார். **மீதியான துணிக்கைகளை பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்.**

இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள "கூடைகள்" எனும் பதம் (*kophinos*) நான்காயிரம் பேர் போஷிக்கப்பட்ட சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட வார்த்தையிலிருந்து வித்தியாசப்பட்டது (15:37). இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை ஒரு பிரயாணத்தில் செல்லும் யூதன் புறஜாதிகளிடத்தில் அப்பங்களை வாங்காதபடிக்கு தன் கையிலே கொண்டு செல்லும் அப்பம் வைக்கும் (உணவுக்) கூடையை குறிப்பிடுகிறது.[11] இயேசு நான்காயிரம்பேரை போஷிக்கும்போது "கூடைகள்" பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை (*spuris*) அவர்கள் பயன்படுத்தின அந்தக் கூடை ஒரு ஆள் உட்காரும் அளவுக்குப் பெரிதாயிருந்தது, தமஸ்குப் பட்டணத்தின் சுவர் வழியாக பவுலை அங்கிருந்த கிறிஸ்தவர்கள் ஒரு கூடையில் உட்கார வைத்து கீழே இறங்கிய போது பயன்படுத்தியதைப் போன்றது (நடபடிகள் 9:25). எப்படியிருப்பினும், லியோன் மோரிஸ் தர்க்கித்து கூடை எனும்பதம் அதன் உருவாக்கத்தில் செய்யப் பயன்பட்டபொருளைக் கொண்டு வித்தியாசமாய் சொல்லுகிறதேயன்றி அதன் அளவை வைத்து அல்ல என்றார். *Kophinos* என்ற பதம் மிகவும் விரைப்புத் தன்மையுடையதும், அநேகமாக கூடைமுடையும் மிலாறுகளால் செய்யப்பட்ட (விரைப்புத் தன்மையுடைய) வகையையும், *spuris* என்பது வளைந்துகொடுக்கும் தன்மையுடையதாய், சணல் அல்லது அதற்கு ஒப்பான பொருளால் செய்யப்பட்டக் கூடை வகையையும் குறிக்கும் என்று முடிவு செய்தார்.[12]

"பன்னிரண்டு" எனும் பதம் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் பன்னிரண்டு அப்போஸ்தலரையும் நினைப்பூட்டுகின்றன. திரளான கூட்டம் என்பது புதிய இஸ்ரவேலராகிய ஜனங்களை குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளலாம். தேவனால் இஸ்ரவேலர் அற்புதவிதமாய் வனாந்தரத்தில் போஷிக்கப்பட்டது போல, இயேசுவும் புதிய இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரமான பகுதியில் போஷித்தார். மீதியான

துணிக்கைகளை எடுத்து வைத்த காரியம் அற்புதத்தின் நிறைவுத் தன்மையைக் காட்டுகிறது, மீதியானவைகளைச் சேர்க்கும் படி அவர் கூறியதால், இயேசு தமது சீஷர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதத்தை வீணடிக்காதபடிக்குக் கற்றுக் கொடுத்தார் (காண்க லூக்கா 15:13).

**வசனம் 21.** அந்த நாளில் கூடிவந்த கூட்டத்தின் அளவு மிகுதியாய் இருந்தது. சாப்பிட்டவர்களின் தொகை **ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர … புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்.** பழங்காலத்தில் ஆண்களை மட்டுமே பொதுவாக எண்ணிக்கையில் எடுத்துக் கொள்வது வழக்கமாயிருந்தது. எண்ணாகமம் புத்தகத்தில், இருபது வயது நிரம்பிய - இராணுவத்தில் சேர்ந்து யுத்தம் செய்யும் பெலன் பெற்ற - ஆண்களை மட்டுமே இலக்கம் பார்த்து கணக் கெடுத்தார்கள் (எண்ணாகமம் 1:2, 3). இயேசு ஐயாயிரம் பேரைப் போஷித்தார், அது ஏறத்தாழ ரோம அரசின் ஒரு படைப் பிரிவு. ஜனங்கள் அவருடைய செயலைக் குறித்து இவ்விதம் அர்த்தம் செய்தார்கள் - பசியுள்ளோருக்கு போஜனமும் வியாதிப் பட்டவர்களுக்கு சுகத்தையும் அளித்தார் - யுத்தத்தில் இருப்போருக்கு உதவும் மிகப்பெரிய சேவை போன்றது. இவ்விதமாக அவர்கள் தங்கள் மனதில் தீர்மானித்தவர்களாக, “அவரை ராஜாவாக்கும்படி பிடித்துக் கொண்டுபோக மனதாயிருந்தார்கள்” (யோவான் 6:15).

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## ஐயாயிரம் பேரை போஷித்தல் (14:15-21)

குற்றம் கண்டு பிடிக்க விழையும் சில நபர்கள் தங்களை வல்லுனர்களாக நினைத்துக் கொண்டுள்ள அவர்கள் ஐயாயிரம் பேரை போஷித்ததும் நாலாயிரம் பேரைப் போஷித்ததுமாகிய இரண்டு கதைகளும் ஒரே நிகழ்ச்சிதான், ஆகிலும் எப்படியோ உண்மையை சீர்குலைத்துள்ளனர் என்கின்றனர். நாம் இந்த இரண்டு அற்புதங்களையும் ஆழ்ந்து ஆராய்வோமானால் அவர்கள் கூற்று பொய்யானது என நிரூபிக்க முடியும்.

1. *வித்தியாசப்பட்ட தருணங்கள்.* இரண்டு அற்புதங்களுக்கும் இடையே எவ்வளவு காலம் எடுத்துக்கொண்டது என்று நமக்கு உறுதியாகத் தெரியாதிருந்தபோதிலும், நிச்சயமாக அவைகள் இரண்டும் வேறுபட்ட இரண்டு நிகழ்ச்சிகள் தான். “பரிசேயர் சதுசேயர் என்பவர்களாகிய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்” என்று அவர் தம்முடைய சீஷர்களுக்கு எச்சரித்த போது, இரண்டு நிகழ்வுகளையும் வேறுபடுத்திக் காண்பித்தார் (16:9, 10).

2. *வேறுபட்ட இடங்கள்.* ஐயாயிரம் பேரை போஷித்த சம்பவம் பெத்சாயிதாவுக்கு அருகில் (லூக்கா 9:10) மற்றும் அதில் உட்பட்டவர்களில் அதிகமானோர் கலிலேயாவிலிருந்து வந்த யூதர்கள். நான்காயிரம் பேர் போஷிக்கப்பட்ட சம்பவம் தெக்கபோலியாவில் நடந்தது (மாற்கு 7:31; 8:1-9). அந்தப் பகுதியில் அநேக புறஜாதியினரும் ஜனத்தொகையில் இருந்தபடியால் அநேகமாக யூதரல்லாதோரும் அநேகர் இதில் உட்பட்டவர்களாயிருந்திருக்கலாம்,

*3. வேறுபட்ட காலக்கட்டங்கள்.* ஐயாயிரம்பேர் இயேசுவோடு இருந்தது ஒரு நாள் மட்டுமே (14:15, 23), நான்காயிரம்பேரோ மூன்று நாட்கள் அவருடன் இருந்தார்கள் (15:32).

*4. வேறுபட்ட அளவு கொண்ட உணவுகள்.* இயேசு தமது முதல் அற்புதத்தில் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு செய்தார் (யோவான் 6:9). இரண்டாவது அற்புதத்தில் ஏழு அப்பங்களும் சில மீன்களும் காணப்பட்டன (15:34). மேலும், எல்லாரும் புசித்துத் திருப்தியாகி மீதி துணிக்கைகளை சேர்த்தபோது இருவேறுபட்ட அளவுகளில் எடுத்து வைக்கப்பட்டன. முதல் அற்புதத்திற்குப் பின், பன்னிரண்டு கூடை நிறைய எடுத்து வைக்கப்பட்டது (14:20); ஆனால் இரண்டாவது அற்புதத்திற்குப் பின், ஏழு பெரிய கூடைகளில் எடுத்து வைக்கப்பட்டது (15:37).

மத்தேயு மாற்கு ஆகிய இரண்டு புத்தகங்களிலும் இரண்டு அற்புதங்களையும் தெரிவிக்கின்றன. இரண்டு எழுத்தாளர்களும் ஒரே நிகழ்ச்சியை ஏன் இரண்டுமுறை பதிவு செய்ய வேண்டும்? அவர்கள் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டபடியால், இந்த ஒவ்வொரு அற்புதத்தைப் பற்றிய உண்மையையும் எழுதினார்கள்.

*நாம் என்ன செய்ய வேண்டும்?* இயேசு ஐயாயிரம் பேர்களை போஷித்ததிலிருந்து நாம் எவைகளைக் கற்றுக் கொள்கிறோம்? இதோ நான்கு நல்ல பாடக் கருத்துக்கள். (1) நமக்கு உள்ளது எதுவோ அவைகளைப் பயன்படுத்த வேண்டும். ஒரு திரளான கூட்டத்துக்கு ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் போதுமானவையல்ல, ஆனாலும் இயேசு இந்த சிறிய அளவைக் கொண்டு மிகவும் ஏற்புடைய அற்புதத்தை நடப்பித்தார். (2) நாம் கொடுக்க வேண்டியவைகளைக் கொடுக்கிற மன விருப்பம் நமக்கு இருக்க வேண்டும். கொஞ்சத்தைக் கொண்டு அவ்வளவுபேருக்கு உணவளிப்பது எப்படி என்பது அந்திரேயாவின் சந்தேகம். தேவன் எவ்வளவு பெரிய தேவையையும் சந்திப்பார். நம்மிடத்தில் ஒன்றுமில்லையே என நாம் நினைக்கும் வேளையில், தேவன் வேறு எதையாகிலும் திட்டமிடலாம்! விசுவாசமென்பது காணாதவைகளை காண்பதும், நம்புகிறதற்கரியவைகளை நம்புவதும், சாத்தியமற்றவைகளை பெருவதும்தான். (3) நாம் நம்முடைய கர்த்தரின் கட்டளைகளுக்கு அவைகளை புரிந்துகொள்ள இயலாத போதும் கீழ்ப்படிய வேண்டும். இருந்த உணவின் அளவை நினைத்துப் பார்க்கும்போது, இயேசு ஜனங்களை பந்தியிருக்கும்படி அமரச் செய்ததைப் பார்த்து சீஷர்கள் அதை ஏதோ வினோதமான செயலாகப் பார்த்திருப்பார்கள். சாத்தியமற்றதாய்க் காணப்படுவது தேவனால் சாத்தியமாக மாறுகிறது. (4) நமது ஆசீர்வாதங்களை நாம் வீணடிக்கக் கூடாது. மீதியான துணிக்கைகள் யாவும் சேர்க்கப்பட்டன. எதுவும் தூக்கியெறியப்படவில்லை. சேர்த்து வைப்பது முக்கியம் என்று நம்முடைய கர்த்தரே நினைத்திருப்பாரேயானால், நாமும் அப்படிச் செய்வது அவசியமல்லவா?

## சாதாரணக்காரியம் மகிமை பெறுதல் (14:17)

நாம் சாதாரணமானதாகக் கருதிக் கொண்டிருக்கும் காரியங்களை பயன்படுத்துவதன் மூலம் தேவன் தமக்கு மகிமையாக்கிக் கொள்வார். யாத்திராகமத்தில், மோசேயின் கையிலிருந்த சாதாரண கோலை எகிப்திலே

*வாதைகளை எழுப்பவும் சிவந்த சமுத்திரத்தை பிளக்கவும், தமது ஜனங்களுக்கு விடுதலை கொடுக்கவும் பயன்படுத்தினார் (யாத்திராகமம் 4:1-3; 7:17; 8:5, 16; 9:23; 10:13; 14:16). நியாயாதிபதிகளில் சாதாரணமான எக்காளங்களையும், மண்பானைகளையும், தீப்பந்தங்களையும் பயன்படுத்தி முந்நூறு இஸ்ரவேலரைக் கொண்டு மீதியானியரின் சேனையை தோற்கடித்தார் (நியாயாதிபதிகள் 7:16, 22).*

*சுவிசேஷங்களில், இயேசு ஒரு சிறு பையனிடம் இருந்த மதிய உணவை ஒரு பெருந்திரள் கூட்டத்தாருக்குப் போஜனமாகக் கொடுத்தார் (14:17; யோவான் 6:9). இன்று நாம் சாதாரணமானதாக - நினைத்துக் கொண்டு - நம்மிடத்தில் கொண்டிருப்பதை - அவருடைய மகிமைக்கென்று பயன்படுத்த இயலாதா? கிறிஸ்து இவைகளைப் பயன்படுத்தி தமது நாமத்துக்கு கனத்தைக் கொண்டு வர அனுமதிக்கிறோமா?*

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]Josephus *Antiquities* 18.2.1; *Wars* 2.9.1; 3.10.7; *Life* 72. [2]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 142. [3]*2 Baruch* 29.8. [4]*இயேசு ஐயாயிரம் பேரை போஷிப்பதற்கு ஒப்பான பழைய ஏற்பாட்டு சம்பவம் தேவன் எலியாவைப் போஷித்தல் (1 இராஜாக்கள் 17:9-16), ம ற்றும் எலிசா நூறு பேருக்கு ஆகாரமளித்தல் (2 இராஜாக்கள் 4:42-44).* [5]Leon Morris, *The Gospel according to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 375. [6]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 166. [7]Mishnah *Berakoth* 6.1. [8]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 596. [9]David Hill, *The Gospel of Matthew*, The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 246. [10]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 405; *காண்க* Plutarch *Moralia* 279E; 702D-704B.

[11]Juvenal *Satires* 3.14; 6.542; *காண்க* Mishnah *Sotah* 2.1. [12]Leon Morris, *The Gospel According to John*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 345, n. 25.